[2004 நவம்பர் 22

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2004 நவம்பர் 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 10) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2004) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.